ந.க.அ5/33375/2021

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
விருதுநகர். நாள்: 29.09.2021.

குறிப்பாணை

பொருள் :- பொதுப்பணியாளர்கள் - சங்கக் கோரிக்கைகள் - விருதுநகர் மாவட்டம் - தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கத்திலிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனு மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை :- விருதுநகர் மாவட்ட மையம் தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கத்திலிருந்து வரப்பெற்ற மனு நாள்: 28.08.2021.

()()()()()

பார்வையில் கண்டுள்ளவாறு தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட மையம் சார்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வரப்பெற்ற கோரிக்கை மனுவில், தீர்மானம் எண். 4-இல் கீழ்கண்டுள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாவட்ட நிருவாகம் வழங்கும் தரவரிசை பட்டியலில் முதலிடம் பிடிக்கும் போட்டியில் அனைத்து வட்டாட்சியர்களும் கடந்த மாதம் முதல் கிராம நிருவாக அலுவலர்கள் இணையவழி சான்றுகளை அதற்கான விசாரணை காலத்திற்கு முன்பாகவே விரைந்து வழங்குவதற்கு மிகவும் நிர்பந்திக்கப்படுகின்றனர். மேலும் இவ்வாறு நிர்பந்திப்பதால் தவறான சான்றுகள் வழங்குவதற்கு வாய்ப்புகள் உள்ளது. இதனால் கிராம நிருவாக அலுவலர்களுக்கு மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த காலத்திற்குள் இணையவழி சான்றுகளை வழங்க மாவட்ட நிருவாகம் நடவடிக்கை எடுக்கக் கோரி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நேர்வில் இணையதளம் மூலம் சான்றுகள் வழங்குவதில் 30 நாட்களுக்கு மேல் சான்றுகள் நிலுவையில் வைத்திருக்கும் சான்றுகள் குறித்தே மாதந்திர பணித்திறன் ஆய்வுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

மேலும் அரசால் வழங்கப்பட்டுள்ள மக்கள் சாசனத்தில் சான்றுகள் வழங்க கீழ்கண்டுள்ளவாறு கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | சான்றுகள் | சான்றுகள் வழங்குவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலஅளவு |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சாதிச்சான்றுகள் | 7 நாட்கள் |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சாதிச்சான்றுகள் | 2 நாட்கள் |
| 3. | பழங்குடியினர் சாதிச்சான்றுகள் | 7 முதல் 15 நாட்கள் |
| 4. | இருப்பிடம் மற்றும் குடியிருப்புச் சான்று | 7 நாட்கள் |
| 5. | வருமான சான்று | 15 நாட்கள் |
| 6. | ஆதரவற்ற விதவை சான்று | 30 நாட்கள் |
| 7. | வாரிசு சான்றுகள் | 15 நாட்கள் |
| 8. | பிறப்பு மற்றும் இறப்பு சான்றுகள் | 15 நாட்கள் |
| 9. | ஒருங்கிணைந்த சான்று | 15 நாட்கள் |
| 10. | கலப்பு திருமண சான்று | 15 நாட்கள் |
| 11. | கணவரால் கைவிடப்பட்டவருக்கான சான்று | 15 நாட்கள் |
| 12. | பள்ளி ஆவணங்கள் தொலைந்ததற்கான சான்று | 15 நாட்கள் |
| 13. | சொத்து மதிப்பு சான்று | 15 நாட்கள் |
| 14. | முதல் பட்டதாரி சான்று | 15 நாட்கள் |
| 15. | திருமணமாகவில்லையென்பதற்கான சான்று | 15 நாட்கள் |

அதன்படி மக்கள் சாசனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள காலக்கெடுவானது சான்றுகள் கோரி விண்ணப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சான்று வழங்கும் அனைத்து நிலை அலுவலர்களாலும் பரிந்துரை செய்யப்பட்டு மனுதாரருக்கு முழுமையாக சான்று வழங்கக் கூடிய காலக்கெடுவாகும். அதன்படி சான்றுகள் கோரி விண்ணப்பிக்கும் மனுதாரர்களுக்கு கிராம நிருவாக அலுவலர் முதல் வருவாய் ஆய்வாளர், மண்டலத் துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் வட்டாட்சியர் வரை சான்றுகள் பரிந்துரை செய்து உரிய காலக்கெடுவில் முழுமையான வடிவில் சான்றுகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அனைத்து வருவாய் வட்டாட்சியர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒம்)வீ. கிருஷ்ணவேணி,
மாவட்ட ஆட்சியருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
விருதுநகர்.

// ஆணைப்படி //

29/09/2021

அலுவலக மேலாளர் (பொது)

29/9/2021

பெறுநர்

அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள்,
விருதுநகர் மாவட்டம்.

நகல் :- உதவி ஆட்சியர், சிவகாசி.

நகல் :- வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை / சாத்தூர்.

நகல் :-

திரு.கே. முருகேசன்,
மாவட்டத் தலைவர்,
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் சங்கம்,
விருதுநகர் மாவட்ட மையம்,
608/6-5எ, பாரதிதாசன் தெரு,
லெட்சுமி நகர்,
விருதுநகர் - 626 001.